**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, THIRUVIDAIMARUTHUR.**

| | | | |
|---|---|---|---|
| Deposition of Witness for | : PW-2 | Date | : 01.04.2025 |
| Case No. | : **O.S. 166/2019** | Nationality | : Indian |
| Name | : வெங்கடேசன் | Religion | : |
| Father's/Husband's Name | : ஜெயராமன் | Age | : 41 |
| Village | : | | |
| Taluk | : | | |

<u>வா.சா.2</u>

சாட்சி சத்திய பிராமாணம் செய்து விசாரிக்கபடுகிறார்.

**பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

நான் தாக்கல் செய்துள்ள நிருபண வாக்குமூலத்தை படித்து பார்த்து அதில் எந்த தவறும் இல்லை என்பதால்தான் கையொப்பம் செய்துள்ளேன் என்றால் சரிதான். எனது தந்தை உயிருடன் உள்ளாரா என்றால் உயிருடன் உள்ளார். தாவா சொத்துக்களின் சர்வே எண் தெரியுமா என்றால் தெரியும். சர்வே எண் 130/45, 130/46, 130/16 மற்றும் 130/17 ஆகும். மேற்படி சொத்துக்களில் புல எண் 130/16 சொத்தை தவிர மற்ற சொத்துக்களை பொறுத்து ஆட்சேபனை இல்லை என பிரதிவாதிகள் தரப்பில் தெரிவிக்கப்பட்ட விவரம் தெரியுமா என்றால் தெரியும். தாவா சொத்துக்களில் உள்ள மாட்டு கொட்டகை, குப்பைகுழி மற்றும் வழிவறைகள் எந்த சர்வே எண்ணில் அமைந்துள்ளது என்றால் புல எண் 130/16 ல் அமைந்துள்ளது. மேற்படி அமைப்புகள் புல எண் 130/16 முழுவதுமாக அமைந்துள்ளதா என்றால் ஆமாம். அது எங்களது மாட்டு கொட்டகை, குப்பைகுழி மற்றும் கழிவறையாகும். அவற்றை நாங்கள்தான் பயன்படுத்தி வருகிறோமா என்றால் ஆமாம். மேற்படி மாட்டுகொட்டகை பிரதிவாதிகளின் பயன்பாட்டில் இல்லை என்றால் இல்லை. புல

எண்.130/16 ப் பொறுத்து பட்டாவை தவிர கிரய ஆவணம் எதுவும் தாக்கல் செய்துள்ளோமா என்றால் 1937 ம் ஆண்டு பத்திரம் தாக்கல் செய்துள்ளோம். 2 ம் வாதியின் பங்கு சொத்தினை நான் கிரயம் பெற்றுள்ளேனா என்றால் கிரயம் பெற்றுள்ளேன். வழக்கு சொத்தை கிரயம் வாங்குவதற்கு நான் நீதிமன்றத்தில் அனுமதி பெற்றேனா என்றால் இல்லை.

2. பிரதிவாதிகள் தாவா சொத்தினை ஆக்கிரமிப்பு செய்ய வந்ததாகவும் அதனை அக்கம்பக்கத்தினர் வீட்டார் துணையுடன் தடுத்து நிறுத்திவிட்டதாகவும் எனது நிருபண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேன் என்றால சரிதான். அவ்வாறு அக்கம்பக்கத்தினர் வீட்டாரின் விவரம் தெரியுமா என்றால் கூட்டமாக அனைவரும் வந்துவிட்டதால் அவர்களை கவனிக்க முடியவில்லை. எனது தாத்தா மற்றும் பிரதிவாதிகளின் அப்பா பெயர் சாமிநாதன் என்ற பெயர் ஒற்றுமையை பயன்படுத்தி கொடுக்கப்பட்ட மோசடி பட்டாவினை பயன்படுத்தி பொய்யாக இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. 29.06.1937 ஆவணத்திலும் புல எண் 130/16 ல் கண்ட சொத்து குறிப்பிடப்படவில்லை என்றால் சரியல்ல. புல எண் 130/16 ல் கண்ட 2-1/2 ஏர்ஸ் சொத்தில் சரிபாதி 1-1/4 ஏர்ஸ் சொத்து பிரதிவாதிகளிடம் 50 வருடங்களுக்கு மேலாக நீண்ட அனுபவத்தில் இருந்து வருகிறது என்றாலும் அந்த விவரம் வருவாய் துறையினருக்கும் அக்கம்பக்கம் வீட்டில் வசிப்பவருக்கும் நேரடியாக தெரியும் என்றாலும் சரியல்ல. அந்த 1-1/4 ஏர்ஸ் சொத்து பிரதிவாதிகளுக்கு சொந்தம் என கோரி கும்பகோணம் சார்பு நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் சரிதான். எந்த காலத்திலும் புல எண் 130/16 ல் கண்ட 1-1/4 ஏர்ஸ் சொத்தினை நிருபண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளவாறு ஆக்கிரமிக்க வேண்டிய அவசியம் பிரதிவாதிகளுக்கு ஏற்படவில்லை என்றால் சரியல்ல. எனது தந்தை தாக்கல் செய்துள்ள வழக்கில் அவருக்கு அனுசரணையாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. மேற்படி வழக்கில் எனது தந்தை கோரிய பாரிகாரம் அவருக்கு

கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

x

Taken down by Typed to my dictation
in Open Court read over to the witness
admitted and acknowledged by
him/her to be correct.

SIVAPALANI Digitally signed by SIVAPALANI Date: 2025.04.01 18:37:43 +0530

District Munsif cum Judicial Magistrate,
Thiruvidaimarudur.